செய்தி வெளியீடு எண்:567 நாள்:02.10.2016

## செய்திக்குறிப்பு

### இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை 2016–2017

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி ஏற்றமுடன் செயல்படுத்தி வருகிறார். "இன்றும் தமிழ் என்றும் தமிழ்" "அனைத்தும் தமிழ் அறிவியலும் தமிழ்" எனும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சிய வாசகத்தை நிறைவேற்றும் வகையில் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை எனும் திட்டம் 2012 இல் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையால் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி இளைய தலைமுறையினரை எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும், பேச்சாளர்களாகவும் உருவாக்கும் வகையில் , புலமை வாய்ந்த வல்லுநர்களைக் கொண்டு (உண்டு–உறைவிடம் மற்றும் போக்குவரத்துக் கட்டணத்துடன்) ஆண்டுதோறும் ரூ.10.00 இலட்சம் செலவில் ஒரு வார காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் இது 2012–13ஆம் நிதியாண்டிலிருந்து செயற்படுத்தலாம்" என்றும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டது.

தமிழ் வளர்ச்சித் துறையால் அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்று அதில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு பெற்ற மாணவர்களை இதில் பங்கேற்கச் செய்து பயிற்சி அளிக்கப்பெறுகிறது.

அவ்வகையில் 2012–13ஆம் ஆண்டில் ரூ.10இலட்சம் செலவில் 100 கல்லூரி மாணவ மாணவியர்களுக்கும் இதனையடுத்து இத்திட்டத்தை மேலும் சிறப்பாக விரிவுபடுத்தும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இனி ஆண்டுதோறும் 200 மாணவர்களுக்கு ரூ.20.00இலட்சம் செலவில் இளந்தமிழர் இலக்கியப் பட்டறையில் பயிற்சி அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு தொடர்ந்து ஐந்தாம் ஆண்டு நடைபெற்று வருகிறது.

சங்க இலக்கியம், தற்கால இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், அறிவியல் தமிழ், ஆன்மிகத் தமிழ், நாடகத் தமிழ் போன்ற பல்வேறு தலைப்புகளில் தமிழகத்தின் சிறந்த பேச்சாளர்கள், கவிஞர்கள், சொற்பொழிவாளர்கள், தமிழறிஞர்கள் மற்றும் பல்துறை அறிஞர்களைக் கொண்டு ஒரு வாரகாலம் உணவு உறைவிடத்தோடு இளந்தமிழர்களுக்கு

பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிப் பெற்ற மாணவர்கள் பட்டை தீட்டிய வைரமாக பல்வேறு துறைகளில் தனிமுத்திரை பதித்து வருவது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தமிழ் வளர்ச்சிப் பணிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இளைஞர்கள் இப்பட்டறை மூலம் செதுக்கி செப்பமிடப்பட்டவர்களாக ஊடகத்துறையிலும், நாடக மேடைகளிலும், சொற்பொழிவு விவாத அரங்குகளிலும் சிறந்து விளங்குகின்றனர்.

தமிழ் வளர்ச்சித் துறையால் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு தற்போது 5ஆம் ஆண்டாக "இளந்தமிழர் இலக்கியப் பயிற்சி பட்டறை'' சென்னை – 113, தரமணியில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 05.12.2016 முதல் 11.12.2016 வரை நடத்தப் பெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையை 05.12.2016 அன்று முற்பகல் 11.00 மணி அளவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அரசு செயலாளர் தலைமையில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து முதல்நாள் பயிற்சியில் ஊடகத்தமிழ், இன்றைய உலகில் கணினித் தமிழ் வளர்ச்சி, வானியல் தமிழ், அறநெறி, பழந்தமிழர் வாழ்வியல் போன்ற தலைப்புகளில் மாணாவர்களுக்குத் தலைசிறந்த அறிஞர் பெருமக்களால் பயிற்சி அளிக்கப்படவுள்ளன.

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.